## 2026 தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில்,

# கழகம் வெற்றிபெற இளைஞர் அணியினர் ஓயாது உழைப்போம்!

## சேலத்தில் - கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை !

**சேலம், அக். 22-**

**“2026 தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில், கழகம் வெற்றிபெற இளைஞர் அணியினர் ஓயாது உழைப்போம்” என சேலம் இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் உரையாற்றிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

சேலத்தில் தி.மு.கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களின் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

கழகத்தின் முதன்மை அணி, முதல் அணி இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்தித்து உரையாடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இதே சேலத்தில்தான் கடந்த ஜனவரி மாதம் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டை ஒட்டுமொத்த இந்தியாவும் திரும்பிப் பார்க்கின்ற அளவிற்கு மிகச் சிறப்பாக எழுச்சியோடு நாம் நடத்திக் காட்டினோம். அந்த மாநாட்டின் வெற்றிக்காக நீங்கள் அத்தனை பேரும் இரவு பகல் பார்க்காமல் உழைத்தீர்கள்.

### மிகப்பெரிய ஒரு வெற்றி

அந்த மாநில மாநாட்டிலேயே தலைவர் அவர்களுக்கு நாம் ஒரு வாக்குறுதி கொடுத்திருந்தோம். அப்பொழுது வரவிருந்த நாடாளுமன்றத் தேர்தலில் நம் கழக அணியின் வெற்றியைக் கண்டிப்பாக இளைஞர் அணியின் சார்பாக உறுதி செய்வோம்என்றவாக்குறுதியைக்கொடுத்து இருந்தோம்.

தமிழ்நாடு, புதுச்சேரி உட்பட 40 இடங்களிலும் நம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான அணி கழகத் தலைவர் தலைமையிலான அணி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது.

இன்னும் சொல்லப்போனால் இந்த சேலம் தொகுதியிலும் நம் வேட்பாளர் அண்ணன் செல்வகணபதி அவர்களுக்காக நீங்கள் எல்லாம் பிரச்சாரம் செய்திருப்பீர்கள். மிகப்பெரிய ஒரு வெற்றியை அண்ணன் செல்வகணபதி அவர்களுக்கு நாம் பெற்றுக் கொடுத்தோம். அதற்கும் இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட பெருமைகளைக் கொண்ட இந்த சேலம் மண்ணிற்கு நான் பலமுறை வருகை தந்திருக்கிறேன்.

இங்கு ஏற்கனவே பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல சாதாரண ஒரு கழக உறுப்பினராகப் பிரச்சாரத்திற்காக வந்திருக்கிறேன். கழக நிகழ்ச்சிகள், திருமண வரவேற்பு நிகழ்ச்சிகள் இப்படிப் பல நிகழ்ச்சிகளுக்காக வந்திருக்கிறேன். இளைஞர் அணி பொறுப்பேற்றவுடன் பல நிகழ்ச்சி களுக்கு வந்திருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராகவும் பலமுறை இந்த சேலம் மண்ணுக்கு வருகை தந்திருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அமைச்சராகவும் பல முறை வந்திருக்கிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்ற பிறகு, முதன்முறையாக சேலத்திற்கு வந்து உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.

கடந்த 28ஆம் தேதி தலைவர் அவர்கள் துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை வழங்கிய பிறகு, தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் இருந்து கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் எல்லோரும் சென்னைக்குக் கிளம்பி வர ஆரம்பித்தீர்கள். தினமும் இரண்டு, மூன்று மணி நேரம் உங்களைச் சந்திப்பதிலேயே போய்க் கொண்டிருந்தது. துணை முதலமைச்சராகி இது மட்டும்தான் வேலையா என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

அதன் பிறகு, ``நீங்கள் யாரும் தயவு செய்து சென்னைக்கு வர வேண்டாம். நானே உங்களை யெல்லாம் உங்கள் மாவட்டத்திற்கு வந்து சந்தித்து, உங்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்கிறேன்” என்று உங்களுக்கு எல்லாம் ஒரு அன்பு வேண்டுகோள் வைத்திருந்தேன்.




சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் காட்சி!

உங்களை எல்லாம் இன்றைக்குச் சந்தித்து உங்களின் வாழ்த்துகளைப் பெறுவதற்காக நான் இங்கே வந்து இருக்கிறேன்.

நேற்று முன்தினம் சென்னையில் இருந்து கிளம்பி, விழுப்புரம் திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மாவட்ட நிகழ்ச்சிகளை முடித்து விட்டு நேற்று நள்ளிரவுதான் நான் இங்கு வந்து சேர்ந்தேன். வருகின்ற வழி எல்லாம் பொதுமக்கள், கழகத்தினர் முக்கியமாக மிக எழுச்சியாக நம் இளைஞர் அணி தம்பிமார்கள், நிர்வாகிகள் மிகுந்த எழுச்சியோடும் அன்போடும் சிரித்த முகத்தோடும், என்னவோ அவர்களே துணை முதலமைச்சர் ஆன மாதிரி வரவேற்றார்கள். மனதில் இருந்து உண்மையைப் பேசுகிறேன், எனக்கும் அப்படித்தான் தோன்றியது.

இதிலிருந்தே நீங்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம். எனக்கு இருக்கின்ற அத்தனை கஷ்டங்களும் உங்களுக்கும் இருக்கும். நீங்கள் எப்படிச் சிரித்த முகத்தோடும், எழுச்சியோடும், அன்போடும் வாழ்த்தி என்னை வரவேற்கிறீர்களோ, அதைவிட 100 மடங்கு இல்லை, ஆயிரம் மடங்கு இல்லை, பத்தாயிரம் மடங்கு எனக்கு உங்களை யெல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சியாக இருந்தது.

மகிழ்ச்சி என்று சொல்வதை விட, இன்னும் கூடுதல் பொறுப்பாக இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும் என்பதையும் நான் உணர்கிறேன். உங்களின் உழைப்பால்தான் உங்களின் அன்பால்தான், உங்களின் ஆதரவால்தான் இது சாத்தியப்பட்டது. உங்கள் எல்லோரின் உழைப்புதான் எனக்கு இந்தப் பொறுப்பை வழங்கி இருக்கிறது என்று முழுமையாக நம்புகிறேன்.

### நீங்கள் இல்லாமல் நான் இல்லை!

மீண்டும் சொல்கிறேன், நீங்கள் இல்லாமல் நான் இல்லை. நான் பலமுறை இந்த விஷயத்தைப் பேசி இருக்கிறேன். இளைஞர் அணி அமைப்பாளர் கூட்டங்களிலே பலமுறை சொல்லி இருக்கிறேன். எவ்வளவு பெரிய பொறுப்புக்கு வந்தாலும், தலைவர் அவர்கள் எனக்கு எவ்வளவு பொறுப்பு வேலைகளைக் கொடுத்தாலும், என் மனதிற்கு என்றைக்குமே நெருங்கிய ஒரு பொறுப்பு என்றால், அது கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்புதான்.

அதற்குக் காரணம் நீங்கள்தான். எப்பொழுதுமே உங்களுடன் சேர்ந்து உழைக்கும்போது ஒரு தனி உற்சாகமும், மகிழ்ச்சியும் தானாகவே ஏற்பட்டுவிடும். அதே உணர்வோடுதான் இன்றைக்கு உங்கள் முன்பு நின்று கொண்டிருக்கிறேன். இந்த நேரத்தில் சுற்றுலாத்துறை அமைச்சராக, நம் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் ராஜேந்திரன் அவர்களுக்குத் தலைவர் அவர்கள் பொறுப்பு கொடுத்து இருக்கிறார். அவருக்கு இளைஞர் அணியின் சார்பாக, நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

### தலைவரின் நம்பிக்கை!

இன்றைக்கு இளைஞர் அணியில் இருந்து பல பேர் அவர்களின் உழைப்பால் சட்டமன்ற உறுப்பினர்களாக, உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, மாவட்டக் கழகச் செயலாளராக, அமைச்சர்களாகப் பொறுப்புகளைப் பெற்று இருக்கிறார்கள். அந்த வகையில், இன்றைக்கு அமைச்சராக உள்ள அண்ணன் ராஜேந்திரன் அவர்களும் நம் இளைஞர் அணியில் இருந்து பணியாற்றி, தலைவரின் நம்பிக்கையைப் பெற்று இன்று அவர் அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறார்.

இன்னும் சொல்லப்போனால் துணை முதலமைச்சரான நானும் இதே இளைஞர் அணியில் இருந்து இப்பொழுது இந்தப் பொறுப்புக்கு வந்து இருக்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்லப் போனால், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஒரு நாட்டின் முதலமைச்சரையே நம் இளைஞர் அணிதான் உருவாக்கி இருக்கிறது. அதற்குக் காரணம் நீங்கள்தான். ஆகவே, இளைஞர் அணியில் சிறப்பாக உழைப்பவர்களுக்குச் சரியான அங்கீகாரத்தை நம் கழகத் தலைவர் அவர்கள் கொடுப்பார். எப்போது, யாருக்கு என்ன பொறுப்பு கொடுக்க வேண்டும், என்பது அவருக்குத் தெரியும். அதற்கு இதுதான் ஒரு சிறந்த உதாரணம்.

### கழகத்தின் பவள விழா!

இன்றைக்கு இந்திய அளவில் எடுத்துக் கொண்டீர்கள் என்றால் மிகவும் துடிப்போடும், வேகத்தோடும் செயல்படும் ஒரு இளைஞர் அணி என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிதான். 44 ஆண்டுகளுக்கு முன்பு, மதுரையில் ஜான்சி ராணி பூங்காவில் நம் தலைவர் அவர்கள் இளைஞர் அணியைத் தொடங்கியபோது, எப்படிச் செயல்பட்டதோ, அதை எழுச்சியோடு, அதே உணர்வோடு கழகத்தின் பவள விழா ஆண்டிலும் இன்று கழக இளைஞர் அணி செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

நம் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டு கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, இளைஞர் அணிக்கு என்று சில பணிகளைக் கொடுத்தார்கள். எல்லா அணிகளுக்கும் பணிகள் கொடுத்தார்கள். இளைஞர் அணிக்கும் சில பணிகளைக் கொடுத்தார்கள். அதாவது ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு கலைஞர் நூலகத்தைத் திறக்க வேண்டும். கலைஞர் நூற்றாண்டுப் பேச்சுப் போட்டியை நடத்தி, சிறந்த 100 இளம் பேச்சாளர்களை அடையாளம் கண்டு தலைமைக் கழகத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என்ற பொறுப்புகளைக் கொடுத்தார்கள்.

நூலகங்களைத் திறக்கின்ற பணிகளை உடனே ஆரம்பித்து விட்டோம். ஆனால், இந்தப் பேச்சுப் போட்டியைத் துவங்குவதற்குக் கொஞ்சம் காலம் தாமதம் ஆகிவிட்டது. ஏனென்றால், தேர்தல் வேலைகள் இருந்தன. இளைஞர் அணிக்கு இல்லம் தோறும் இளைஞர் அணி என்று பல்வேறு வேலைகள் இருந்தன. இந்தப் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து வருகிறோம். இதுவரை 75 தொகுதிகளில் இளைஞர் அணியின் சார்பாக கலைஞர் நூற்றாண்டு நூலகங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன.

### 234 கலைஞர் நூலகங்கள்!

குறிப்பாக, 100 நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்களை நம் அன்பகத்தில் இருந்து அனுப்பி இருக்கிறோம். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், எனக்கு நீங்கள் நினைவு பரிசாகக் கொடுத்த புத்தகங்கள் கிட்டதட்ட 50 ஆயிரம் புத்தகங்கள், கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களுக்கு நான் செல்லும் போது நானே நேரில் வந்து கலைஞர் நூலகத்தைத் திறந்து வைத்திருக்கிறேன்.

சுற்றுபயணம் வரும் இடங்களில் நேரம் இருக்கின்ற பட்சத்தில், நேரமில்லாத பட்சத்திலும் வந்து இருக்கிறேன். அங்கு வந்து அந்த நூலகங்களைத் திறந்து வைத்திருக்கிறேன். ஆனால், 234 தொகுதிகளிலும் நான் நேரில் வந்து திறப்பது சாத்தியப்படாது. அதனால், உங்களிடம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் நூலகங்கள் தயாரானவுடன், அன்பகத்திற்குச் சொல்லுங்கள். ஒரு பத்து நாள், 15 நாள் அந்த மாவட்டத்திற்கு நான் சுற்றுப்பயணம் வருவதாக இருந்தால், அதற்காகக் காத்திருந்து நானே வந்து அதைத் திறந்து வைக்கிறேன். ஆனால், அதற்கு மேல் தாமதமாக அதை நடத்த வேண்டாம்.

நீங்களே அந்த மாவட்டப் பொறுப்பு அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து, அந்த நூலகங்களைத் திறந்து புகைப்படங்களை எடுத்து, அதை மட்டும் அன்பகத்திற்கு நீங்கள் அனுப்பி வையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைவரிடம் ஒரு வாக்குறுதி கொடுத்து இருக்கிறேன். தலைவர் என்னிடம் கேட்டார். `நூலகங்கள் எத்தனை திறந்து இருக்கிறீர்கள்?’ என்று, நான் சொன்னேன் `இன்னும் மூன்றே மாதங்களுக்குள் கண்டிப்பாக 234 தொகுதிகளிலும் 234 கலைஞர் நூலகங்கள் கண்டிப்பாகத் திறக்கப்படும்’ என்று வாக்குறுதி கொடுத்து இருக்கிறேன்.

### பாராட்டுகள் – வாழ்த்துகள்!

இந்த நேரத்தில் நம் மாநிலச் துணைச் செயலாளர்கள் இளையராஜா அவர்களுக்கும், சகோதரர் இன்பா ரகு அவர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ள மண்டலங்களுங்களுக்கு உட்பட்ட அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் நூலகங்களைத் திறந்துள்ளனர். இரண்டு மாநில துணைச் செயலாளர்களுக்கும் நாம் அனைவரும் சேர்ந்து, நம் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வோம்.

அவர்களுக்குத் துணை நின்ற மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற மாநில துணைச் செயலாளர்களும் அந்தப் பணிகளை விரைந்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, `என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டி’களை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம். மாவட்ட அளவில், மண்டல அளவில் நடத்தி முடித்து இருக்கிறோம். விரைவில் அந்த இறுதி போட்டிகளையும் நடத்த இருக்கிறோம். இறுதி போட்டி இன்று நடப்பதாக இருந்தது.

### வெள்ள எச்சரிக்கை!

சென்னையில் ஒரு மிகப்பெரிய வெள்ள எச்சரிக்கையின் காரணமாக இரண்டு, மூன்று நாட்கள் மழை பெய்யும் என்று எச்சரிக்கைக் கொடுத்தார்கள். இரண்டு நாட்கள் கனமழை பெய்தது. அந்த மழையின் காரணமாக, இப்போது அந்தப் பேச்சு போட்டியைத் தள்ளி வைத்து, வருகின்ற 27ஆம் தேதி அடுத்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பரிசளிப்பு விழாவில் முதல் மூன்று பரிசுகளை நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களே கலந்துகொண்டு வெற்றி பெற்ற பேச்சாளர்களுக்குப் பரிசுகளை வழங்கி, அவர்களைப் பாராட்ட இருக்கிறார்கள்.

இந்தப் பேச்சுப் போட்டிகளை 47 இடத்தில் நடத்தினோம். எல்லா இடத்திலும் ஒரே மாதிரி சீராக ஒரே அமைப்பில் இந்தப் போட்டிகளை ஏற்பாடு செய்து இருந்தீர்கள். யாரும் ஒரு குறையும் கண்டு பிடிக்க முடியாத அளவிற்கு மிகச் சிறப்பாக இந்தப் போட்டிகளை நடத்தி முடித்து இருக்கிறோம். கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியுடன் இணைந்து, அந்தப் பேச்சுப் போட்டிகளையும் தொடர்ந்து ஒளி பரப்பிக் கொண்டிருக்கிறோம்.

என் சமூக வலைதளப் பக்கத்திலும் சிறந்த பேச்சாளர்களின் பேச்சுகளையும் தொடர்ந்து பகிர்ந்து கொண்டே வந்திருந்தேன். இந்தப் பேச்சுப் போட்டியை நடத்த, உழைத்த உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்று, உங்களின் முகங்களைப் பார்க்கும் பொழுது எனக்குத் தெரிகிறது.

### விரைவில் அறிவிப்பு

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனம். அதுவும் விரைவிலேயே வர இருக்கிறது. மாநில துணைச் செயலாளர்கள் இதற்காக அந்தந்தப் பகுதிகளில் நேர்காணல் பணிகளைச் செய்து முடித்து இருக்கிறார்கள். அவர்கள் நேர்காணல் செய்து தந்த பட்டியல், அதேபோல் களத்தில் சிறப்பாகச் செயல்படும் தற்போதைய நிர்வாகிகளின் பட்டியல், மாவட்ட, ஒன்றிய செயலாளர்களின் பரிந்துரை, இந்த மூன்றையும் கருத்தில் கொண்டு ஒன்றிய நகர, பேரூர், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனம் விரைவில் முரசொலியில் வெளியிடப்படும்.

அந்தப் பணிகள் நிறைவடைந்தவுடன் கிளைக் கழகம், நகர, பேரூர், வார்டுகளுக்கான அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப் படுவார்கள். கழக அமைப்போடு சேர்ந்து, அதற்கான பணிகளை விரைவில் நாம் தொடங்க இருக்கிறோம். இன்னொரு முக்கியமான பணி இல்லந்தோறும் இளைஞர் அணி பணியை மிகச் சிறப்பாக நீங்கள் செய்து கொண்டு வருகிறீர்கள்.

### மிக முக்கியமான பணி

இளைஞர் அணி முன்னெடுக்கின்ற பணிகளிலேயே மிக மிக முக்கியமான பணி எதுவென்றால், அது இல்லந்தோறும் இளைஞர் அணி என்ற பணிதான். இல்லந்தோறும் இளைஞர் அணி மூலமாக சரியான நபர்களை இளைஞர் அணிக்குக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் நம் ஒரே எண்ணம், ஒரே லட்சியம்.

நாம் உறுப்பினர் சேர்க்கிறோம். சேர்க்கவில்லை. அது இப்போது பிரச்சினை கிடையாது. ஆனால், 16 வயதிலிருந்து 35 வயதுக்குள் இருக்கின்ற இளைஞர்களை நாம் போய் சந்திக்க வேண்டும். இளைஞர் அணியில் சேர்வதும் சேராமல் இருப்பதும் அவர்களின் சொந்த விருப்பம். ஆனால், நாம் அனைவரையும் சந்தித்திருக்க வேண்டும். அந்த முயற்சியை நாம் எடுத்திருக்க வேண்டும். இல்லந்தோறும் இளைஞர் அணியைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று நம் இளைஞர் அணி நிர்வாகிகள் ஏறி, இறங்கியாக வேண்டும்.

களத்தில் எந்த அளவிற்குப் பணியாற்றுகிறோமோ, அதே அளவிற்கு இப்பொழுது சமூக வலைதளத்திலும் தரமாகச் செயல்பட வேண்டும். அதற்காகத்தான் இளைஞர் அணியின் சார்பாக, மண்டல வாரியாக சமூக வலைதளப் பயிற்சிகள் கொடுத்து கொண்டு இருக்கிறோம். உங்களில் பல பேர் அதில் கலந்து கொண்டிருக்கிறீர்கள். சென்னையில்கூட நடந்தது. இன்னும் பல மாவட்டங்களில் நடத்தப் போகிறோம்.

ஐந்து மண்டலங்களில் இந்தப் பயிற்சி முகாம்கள் நிறைவடைந்து இருக்கின்றன. அது உங்களுக்குப் பயனுள்ளதாக அமையும். அது அமைந்து கொண்டிருக்கிறது என்பதை சமூக வலைதளப் பக்கங்களில் பார்க்கும் பொழுது, அதன் ரிசல்ட் தெரிகிறது.

இதில் ஒரு முக்கியமான விஷயத்தை நான் இப்போது சொல்லியாக வேண்டும்.

நம் மாநில துணைச் செயலாளர் சகோதரர் ஜி.பி.ராஜா அவர்கள் அவரின் மண்டலத்திற்குட்பட்ட திருச்சுழி தொகுதியில் ஒவ்வொரு பாகத்திலும் இளைஞர் அணிப் பொறுப்பாளர்களை நியமித்து, பாக அளவில் சமூக வலைதளப் பயிற்சியை கொடுத்து இருக்கிறார். இதுவும் மிகவும் வரவேற்கத்தக்க பாராட்டுக்குரிய ஒரு விஷயம். நம் அனைவரின் சார்பாக பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வோம்.

மீதமுள்ள நான்கு மண்டலங்களிலும் இந்த சமூக வலைதளப் பயிற்சி முடிந்தவுடன் தமிழ்நாடு முழுக்க பாக அளவில் இளைஞர் அணிப் பிரதிநிதிகள் வாயிலாக, சமூக வலைதளப் பயிற்சியை இளைஞர் அணி தம்பிமார்களுக்குக் கொடுக்கின்ற ஒரு திட்டமும் இருக்கிறது. அடுத்து மிக மிக முக்கியமான ஒரு விஷயம். பொதுமக்களுக்கு நாம் செய்கின்ற ஒரு கடமை.

இது வடகிழக்குப் பருவமழை காலம். கடந்த வாரம் பெய்த கனமழையின் போது நீங்கள் எல்லோருமே களத்திற்குச் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டீர்கள். இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கிறது எப்போது வேண்டுமானாலும் சில மாவட்டங்களில் கனமழை பெய்யலாம். ஆகவே, இளைஞர் அணியினர் களத்தில் இறங்கி எப்பொழுதுமே மக்களுக்குப் பணி செய்ய உதவுவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

ஏனென்றால், உங்களுக்குத் தெரியும். 2020 ஆம் ஆண்டு கொரோனா காலத்தில் இருந்தே எந்த பேரிடர் வந்தாலும், களத்தில் முதலில் இறங்கி வேலை செய்வது யார் என்றால், இளைஞர் அணிதான்.



தொடர்ச்சி 4ஆம் பக்கம்